கேட்டாலும்கூட சர்வாதிகார முறையில், முடியாது, இந்தி படிக்கக் கூடாது, ஆங்கிலம்தான் படிக்க வசதி செய்து தர முடியும் என்ற கடுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் கட்சி நடிகர்கள்கூட இந்திப்படங்களை இயக்குகிறார்கள். பல நடிகர், நடிகைககள் இன்று தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இந்திப்படங்களில் நடித்து பெரிய அகில இந்திய நடிகர், நடிகைளாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் புகழும் செல்வமும் கிடைக்கிறது. அதைப்போல தமிழைப் பயிற்று மொழியாக ஏற்று உடன் நவோதயா பள்ளிகளைத் திறக்க வேண்டும். எந்த மாநிலத்திலும் நவோதயா பள்ளிகளை வேண்டாமென்று எந்த மாநில சர்க்காரும் சொல்லவில்லை. அதைப்போலவே நம்முடைய தமிழக சர்க்காரும், இப்பொழுது கல்வியமைச்சரவர்களும் மத்திய சர்க்காரோடு நல்லமுறையிலே விவாதித்துக் கொண்டு வருவதாக நம்முடைய கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தயைசுர்ந்து 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்'' என்பதைப்போல, இந்தியாவிலே எல்லோரும் இந்தி படித்து இந்தி மொழியைத் தெரிந்து கொண்டிருப்பதைப்போல தமிழகத்திலே உள்ள நாம் அனைவரும் இந்தியைக் கற்று, இந்தியா முழுவதும் நாம் செல்லக்கூடிய வகையிலே, நாம் உண்மையிலேயே இந்தியனாக இருப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3—3—1987) காலை 10 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவை முன் வைககப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

22. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ-V) துறையின் 21—11—1986 ஆம் நாளிட்ட 3217 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4, 1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]